**O.S.No. 20/2015**

**PW1 :** ஜோதிநாதன் தேதி 21.01.2026

**வாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 5 மற்றும் 10 ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் 12 ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். நான் என் சகோதர சகோதரிகள் ஆகியோர்களை படிக்க வைத்து திருமணம் செய்து வைத்தது என் தந்தை தான் என்றால் சரியல்ல என் அம்மா தான் படிக்க வைத்தார். இந்த வழக்கில் பிரதிவாதிகள் என்ன எதிர்வாதம் செய்துள்ளார்கள் என்பதை படித்து தெரிந்து கொண்டேன். நான் 1968 ல் பிறந்தேன். நான் பிறப்பதற்கு முன்பே என் தந்தை சுந்தரம் 15.6.65 ல் தாவா சொத்துகளில் பொதுவில் 3 பாகத்தை ஒரு சின்னசாமிகவுண்டருக்கு கிரையம் கொடுத்திருக்கிறார் என்பதை எதிர் வழக்குரையில் சொல்லியிருப்பதை தெரிந்து கொண்டேன். மேற்படி பத்திரத்தை பார்த்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் பத்திரம் என் தந்தை 15.6.65 ல் கிரையம் கொடுத்த ஆவணமா என்றால் சாட்சி ஆவணத்தை படித்து பார்த்துவிட்டு என் தந்தை எழுதி கொடுத்த பத்திரம் தான் என்று கூறினார். அது **பிவாசாஆ 1.** கிரையம் வாங்கிய சின்னசாமி என் தந்தை சுந்தரத்திற்கு பிவாசாஆ 1 சொத்தை அதே தேதியில் எதிரிடை கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அது **பிவாசாஆ 2** இணையவழி நகல். கிரையம் வாங்கிய சின்னசாமி மீது நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான் அவரை நான் பார்த்ததில்லை. பிவாசாஆ 1 கிரைய பத்திரம் செல்லாது என்று நாளது வரை நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். 1973 ல் நான் 2ம் வாதி ராதாமணி இருவரும் இளவர்கள் என்றால் சரிதான். அதன் பின்னிட்டு தான் 3ம் வாதி 1978 ல் பிறந்தார். என்னையும் 2ம் வாதியையும் இளவர்களாக காட்டி 30.5.1973 ல் கருப்ப பண்டாரம் அவர் மனைவி சென்னியம்மாள்

ஆகியோருக்கு தாவா சொத்தை 1/3 பங்கை கிரையம் கொடுத்துள்ளார் என்பதை எதிர் வழக்குரை மூலம் தெரிந்து கொண்டேன் (வாசாஆ 9). என் தந்தை விற்ற சொத்துகளில் நான் பங்கு கேட்கிறேனா என்றால் என் அப்பா சொத்திலும் என் தாத்தா சொத்திலும் பங்கு கேட்கிறேன். வாரிசு என்ற அடிப்படையில் எங்கள் குடும்பத்திற்கு மொத்ததில் 1/3 பங்கு தான் என்றால் சரிதான். அந்த 1/3 பங்கில் தான் என் அப்பா பிவாசாஆ 1 மற்றும் வாசாஆ 9 ன் படி கிரையம் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. பிவாசாஆ 1 மற்றும் வாசாஆ 9 1/3 பங்கை என் அப்பா விற்ற பிறகு அந்த சொத்துகளில் எந்த உரிமையும் கோர இயலாது என்றால் சரியல்ல. என் தாத்தாவின் அப்பா பழனியாண்டிக்கு மொத்தம் 3 ஆண் மக்கள். கெட்டியாண்டி லிங்காண்டி மற்றும் மாரியாண்டி. நாங்கள் மாரியாண்டியின் வாரிசுகள். மேற்படி 3 பேரில் லிங்காண்டி கடைசியாக இறந்துவிட்டார் என்றால் சரியல்ல என் தாத்தா மாரியாண்டி தான் கடைசியாக இறந்தார். ஒரே வருடத்தில் மாரியாண்டியும் லிங்காண்டியும் இறந்துவிட்டார்கள். மாரியாண்டியின் இறப்பு அப்போது பதிவு செய்யப்படவில்லை. 2012 ல் தான் மாரியாண்டியின் இறப்பை பதிவு செய்ய நான் நடவடிக்கை எடுத்தேன் என்றால் சரிதான். 1973 லிருந்து இறப்பை பதிவு செய்யும் வரை இடைப்பட்ட காலத்தில் தாவா சொத்தின் பேரிலான பட்டா என் தாத்தா பெயரிலோ என் அப்பா பெயரிலோ இல்லை என்று சொன்னால் சரியல்ல என் தாத்தாவின் அப்பா பழனியாண்டி பெயரில் இருந்தது. இந்த தாவாவை தாக்கல் செய்யும் போது சொத்துகளின் பட்டா அர்ஜூனன், மனோகரன், சென்னியம்மாள், ரகுநாதன் மற்றும் மகேஷ் ஆகியோர்களின் பெயரில் தான் இருந்தது என்று சொன்னால் சரிதான். எனக்கு தெரியாமல் பட்டா பெயர் மாற்றம் ஆகியது என்று சொல்கிறேன். 2008 ல் நான் பாகம் பிரித்து கொடுக்கும் படி என் பெரியம்மா சென்னியம்மாளிடம் கேட்டேன். அவர்கள் பிரித்து கொடுக்க முன் வரவில்லை அவருடைய மகன்களை கேட்டு சொல்வதாக சொல்லிவிட்டார். அதனால் தான்

மாரியாண்டியின் இறப்பு சான்றிதழ் கோரி நடவடிக்கை எடுத்தேன் என்றால் சரிதான். மாரியாண்டி 1974 ல் இறக்கவில்லை என்றும் 1956 க்கு முன்பாகவே இறந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. மாரியாண்டி இறந்த பிறகு 1/3 பங்கு சொத்து என் தந்தை சுந்தரத்திற்கு மட்டும் தான் பாத்தியம் என்று சொன்னால் சரியல்ல. தனக்கு இருந்த 1/3 பங்கை என் தந்தை சுந்தரம் பிவாசாஆ 1 ன் படி சின்னசாமிகவுண்டருக்கு கிரையம் கொடுத்து விட்டார் என்று சொன்னால் சரியல்ல எதிர் வழக்குரையில் சொல்லப்பட்டதை தெரிந்து கொண்டேன். சின்னசாமிகவுண்டருக்கு விற்றதை மறைத்து என் அப்பா 2ம் முறையாக வாசாஆ 9 ன் படி கருப்ப பண்டாரத்திற்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. சின்னசாமி கவுண்டரிடம் இருந்து மீண்டும் ஒரு முறை கருப்ப பண்டாரமும் சென்னியம்மாளும் கிரையம் செய்து கொண்டார்கள் என்று சொன்னால் எதிர் வழக்குரையை பார்த்து தான் தெரிந்து கொண்டேன். அந்த பத்திரத்தை நகல் எடுத்து பார்த்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் கருப்ப பண்டாரமும் சென்னியம்மாளும் சின்னசாமி கவுண்டரிடம் இருந்து கிரையம் பெற்ற கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் என்று சொன்னால் சரியல்ல. எதிர் வழக்குரையை பார்த்த பிறகு அதில் சொல்லப்பட்டுள்ள பத்திரத்தை நகல் எடுத்து பார்த்தேன். 1973 ல் இருந்து தாவா சொத்துகள் என் அனுபவத்தில் இருந்தது என்பதை காண்பிப்பதற்கு ஆவணங்கள் இல்லை என்று சொன்னால் சரியல்ல பட்டா மட்டும் உள்ளது. என் அப்பாவின் வாரிசு என்ற முறையில் தான் உரிமை கேட்கிறேனா என்றால் என் தாத்தா மற்றும் என் அப்பாவின் வாரிசு என்ற முறையில் உரிமை கோருகிறேன். எதிர் வழக்குரையில் மேற்படி ஆவணங்களை தவிர லிங்காண்டி குடும்பத்தில் ஏற்பட்ட பல ஆவணங்களை குறித்து சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் எதிர் வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளதை தெரிந்த கொண்டேன். பழனியாண்டி மகன் கெட்டியாண்டிக்கு மாரிமுத்து என்ற ஒரே வாரிசு

என்றால் சரிதான். 1959 ல் அவர் இறந்துவிட்டார். மாரிமுத்துவின் மனைவி பெயர் அன்னம்மாள் என்ற அன்னபூரணி. 1 மற்றும் 2 பிரதிவாதிகள் சுப்பிரமணி ஜெயமணி ஆகியோர் மாரிமுத்துவின் வாரிசுகள் என்றால் சரிதான். 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தவிர மாரிமுத்துவிற்கு மகாலிங்கம் மனோகரன் சகுந்தலா என்ற பிள்ளைகள் இருந்தார்கள் என்றால் சரிதான். அவர்கள் மூவரும் திருமணம் ஆகாமலேயே இறந்துவிட்டார்கள். அன்னம்மாள் தன் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட 1/3 பங்கை லிங்காண்டி குடும்பத்திற்கு விற்பனை செய்து விட்டார் என்றால் எதிர் வழக்குரையில் சொல்லியிருப்பதை தெரிந்து கொண்டேன். அதனால் கெட்டியாண்டி குடும்பத்திற்கு சொத்தில் எவ்வித பாத்தியமும் இல்லை என்றால் அது எனக்கு தெரியாது. தாவா சொத்துகளில் என் தந்தை சுந்தரம் விற்றது மற்றும் மாரிமுத்துவின் மனைவி அன்னம்மாள் லிங்காண்டி குடும்பத்திற்கு விற்றதை ஆகியவை எனக்கு இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நன்கு தெரியும் என்றால் சரியல்ல தெரியாது. ஏற்கனவே விற்ற சொத்துகளின் படி லிங்காண்டி குடும்பத்திற்கு தான் சொத்துகள் பாத்தியம் என்பதை தெரிந்து கொண்டே அவர்களை தொந்தரவு செய்யும் எண்ணத்தில் 7.12.74 ல் இறந்துவிட்டதாக நீதிமன்றத்தை ஏமாற்றி பொய்யான மாரியாண்டியின் இறப்பு சான்றிதழை பெற்றிருக்கிறேன் என்றால் சரியல்ல.